ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 28—7—46 | இதழ் 13

## ★ ஆறுமுகம் ★

[குறிப்போன்]

"சுகம், துக்கம்இரண்டும்வாழ்க்கைத்தேரின் இருஉருளைகள். கவலையைவிடு. கடவுளை நம்பு. அவன் ஆணைப்படியே அனைத்தும் நடக்கும், அவனைத்தொழு, கஷ்டம் நீங்கும், சுகம்பிறக்கும்"

சஞ்சலப்பட்டுக், கூப்பிய கரத்துடன் நின்று, குமுறுகிற நெஞ்சுக்கு ஆறுதல் தேடும், ஏழைக்கு, வேதாந்திகூறும் உபதேசம்இது.

கடவுளின் முகத்திலே, களிப்பு பிறந்தது. இந்தஏழை, எங்கே தன் கஷ்டத்தினல், நம்மை மறந்து விடுவது, அல்லது மனம்நொந்து தூற்றுவது என்ற மனப்போக்கு கொண்டு விடுகிருனே என்று எண்ணினேம், நல்ல வேளையாக, வேதாந்தி, நமக்கு வக்கீலானன். சுகம், துக்கம் இரண்டும் இருக்கத்தான் செய்யும் என்று உபதேசித்தான். ஏழையின் மனம் சாந்தி அடையும் என்று கடவுள் கருதிக் களிப்படைந்தார்.

"ஆட்டுக்கும்அளவறிந்துதானே, ஆண்டவன் வால்வைக்கிருர். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா, பயல், இப்போது தான், படுகிருன். வேண்டும் அவனுக்கு."

ஏழையின் கஷ்டத்துக்குக் காரணமாக இருந்தவன், ஆண்டவன் ஏழையைத் தண்டித்தான். அதுதக்ககாரியம் என்று கூறிக் களிக்கிருன் ஆண்டவனின் முகம் கோபத்தால் சிவந்தது. கொடியவன்! ஏழையைக் கெடுத்ததுடன் இல்லை, என்னையுமல்லவா, நடுச்சந்திக்கு இழுக்கிருன். அந்தஏழை படும்பாடு, என் ஏற்பாடு, அதுவும் சரியான ஏற்பாடுஎன்று தைரியமாகக் கூறுகிருன். எவ்வளவு துணிவு! ஏழையைக் கெடுத்ததுமின்றி, ஏழையை என்மேலே ஏவுகிருனே, இவ்வளவும் என் ஏற்பாடு என்று பேசி. எவ்வளவு வன்னெஞ்சம் இவனுக்கு என்று எண்ணினர், கோபம், பொங்கிற்று, ஆண்டவனுக்கு.

"அட எண்டாதம்பி! ஆண்டவன் ஆண்டவனென்று, அடிக்கொருதடவை பிதற்றுகிறே. அந்த அக்ரமக்காரன் செய்த கொடுமையாலே நீ அவதிப்படுகிறே. ஆண்டவன் ஏன் இதைச் செய்யப்போகிருர்?"

ஏழையைக் கொடுமை செய்தவனின் கெட்டகுணத்தை அறிந்த ஒருநண்பன், ஏழைக்கு வந்தஇடருக்கு ஆண்டவன் பொறுப்பாளி அல்ல என்று கூறுகிருர்.

கடவுளின் கோபம் இந்தப்பேச்சினல்குளிர்ந்துவிட்டது. வேதாந்தி கஷ்டகாலத்திலும் என்னைமறக்கக் கூடாது என்ற உபதேசம் செய்தான், அதற்கு நேர்மாருக, ஏழையைக் கெடுத்த கொடியவன், என் மீது ஏழையை ஏவிவிடப்பார்த்தான். நல்லவேளையாக இந்தநண்பன்வந்தான், என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம், இடர் விளைவித்தவனைப் பற்றியோசி என்று கூறி, ஏழையின் கண்ணையும் கருத்தையும் அந்தப்பக்கம் திருப்பிவிட்டான்; அது மிக நல்லதாயிற்று, என்று எண்ணி ஆண்டவன் நிம்மதியடைந்தார். முகத்திலே, கோபம் போய் தெளிவு பிறந்தது.

"ஆண்டவனே! எங்களை ஏன் இப்படித் தவிக்கவைக்கிருயோ தெரியவில்லையே. அந்தப்பாவிக்குப் பக்கத்துணையாகவா இருக்கிருய்! நியாயமா? நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? தெய்வமே! இது அடுக்குமா?" என்று ஏழையின் மனைவி ஆண்டவனிடம் முறையிட்டு, நீதி வழங்கும்படிக் கேட்கிருள்.

ஆண்டவனின் கண்களிலே இருந்து அவரையும் அறியாமல் நீர் வழியலாயிற்று. "இந்த அபலை, என்னைநீதி வழங்கும்படிக் கேட்கிருளே. அவள்படும் கஷ்டம் ஒரு அக்ரமக்காரனல் உண்டானதுஎன்கிருள், அதுவரையிலே சந்தோஷந்தான், நான் தான் கொடுமைக்குக் காரணம் என்று அம்மை குற்றம் சாட்டவில்லை. ஆனல், என்மீது உடந்தையாக இருக்கும் குற்றத்தைச் சுமத்துகிருர்களே, நான் என்னசெய்வேன்? என்கடமையைநான் செய்யவேண்டுமென்று எனக்குக் கவனமூட்டுகிருள் அந்தக்காரிகை. முறையிடுகிருள்! தூற்றிவிடக் கூடாது! துயர் நேரும்போது, மனதிலே சாந்தி வருவித்துக் கொள்ளாமல், தெய்வத்தை நிந்தித்தாய், ஆகையால் உனக்கு அருள்பாலிக்கமுடியாது என்ருவது சொல்லித் தப்பித்துக் கொள்ளலாமே! இந்தப் பெண்மணி, தன்கஷ்டத்தை என்னிடம் முறையிட்டு அல்லவா, நீதி வழங்கச் சொல்கிருள். ஐயோ! அந்தக் கண்ணீருக்கு நான் சமாதானம்சொல்லியாக வேண்டுமே என்ன செய்வேன்." என்று கூறினர், ஆண்டவன் கண்களிலே இருந்து நீர், தாரை தாரையாகப் பெருகிற்று,

"ஆண்டவனறிய நான் ஒன்றும் தவறு செய்யவில்லை. வீணுக என்மேல் சந்தேகப்பட வேண்டாம். அவன் பொய்பேசுகிருன். நான் அவன் சொத்தை அபகரிக்கவில்லை. சாட்சிஉண்டாகேளுங்கள்.என்னை அவமானப் படுத்த வேண்டாம். ஆண்டவன் சாட்சியாக, நான் அந்த ஏழையின் சொத்தை அபகரிக்கவில்லை" என்று, ஏழையைக் கெடுத்தவன் அலறினன், ஏழையின் பக்கம் சிலர், சேர்ந்து கொண்டு, அடித்து உதைத்து, ஏழையிடமிருந்து அபகரித்த சொத்தைக் கொடுக்கும்படி வற்புறுத்தும்போது. இந்தக் குரல் கேட்டதும், ஆண்டவன் கண்களைத் துடைத்துக் கொண்டார். முகத்திலே, உறுதிபிறந்தது. ஊரார் நியாயம் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்! ஏழையின் சார்பிலே பரிந்துபேசவும், ஆட்கள் உள்ளனர், இனி நமக்குத்தொல்லை இல்லை. என்று எண்ணினர். உறுதி காட்டும் முகத்துடன் நின்ருர்.

ஏழையின் சொத்து திரும்பக் கிடைத்தபிறகு, அவன் களிப்புடன் காணப்பட்டான். எல்லாம் அவன் செயல்! என்று கூறினன். அவனுக்கு உதவியாக வந்தவர்கள், "அதுசரி அப்பா! அந்தக் கொடியவனிடமிருந்து, உன்னை மீட்டோமல்லவா! அப்பப்பா! எவ்வளவு கடினமானகாரியம்!" என்றனர். "அநீதி நிலைக்குமா? ஆண்டவன், அக்ரமக்காரனை விட்டுவைப்பாளு?" என்ருன் களிப்புடன் அந்தஏழை. அநீதி நேரமாகிறது, எங்கள் சிரமத்தை

(6-ம் பக்கம் பார்க்க)

## எமது கவிஞர்

"மந்தஹாசன்"

பொற்கிழியும் பொன்னுடையும் எங்கள்புதுயுகக் கவிஞருக்கு
பண்டைத் தமிழ்ப்பண்பில் பாய்ந்துவரும் இச்சேதி
இன்றைத் தமிழ்மகனின் ஏற்றம் விளக்குவது.

தமிழ்வளர்த்த தார்வேந்தர் தனியாசு இன்றில்லை. ஆயினுமேன்?
தன்தமிழ்ப் பாண்டியராய்த் தமிழ்மக்கள் இன்றெழுந்தார்.
அறியாமை, அச்சம், பொய், அறமின்மை, அடிமை
அத்தனையும் இற்றுவிழப் பாட்டிசைக்கும் பாவலர்க்குப்
பொற்கிழியைப் பரிசில்தரப் பரிவுடனே எழுந்தவர்கள்
அனைவருமே பாண்டியர்தாம்.

கலைக்காகக் கலையென்று கதையளப்பார் இங்குண்டு
அவர்க்கெல்லாம் ஒருவார்த்தை அருங்கவிஞர் கூறுகிறர்
ஏலா இருட்டில் எடுக்கின்ற கைவிளக்கு
இருள்நீக்க அல்லாது எழிலுக்கோ ஏந்துகிறர்?
தமிழர் தனிவாழ்வு தழைத்திருந்த காலத்தில்
கற்பனையும் வர்ணனையும் காட்டிக் கதைசொல்லி,
பரணி, உலாப்பாடிப் பாவலர்கள் கலைவளர்த்தார்
கலைக்காகக் கலையென்ற காலம் அதுபோலும்!

சோம்பிச் சவநிலையிற் சோர்ந்துவிட்ட நம்வாழ்வில்
சுடர்கொளுத்தும் கவிதையிலே கனல்மூச்சே இயல்பன்றே?
ஏடெடுத்துக் கவிதை எழுதுகின்ற நேரத்தில்
எதிர்வந்து கோலங்கள் எத்தனையோ துடவிடினும்,
இன்னலிலே தமிழ்நாட்டில் மக்கள் துயின்றிருக்கும்
நிலையொன்றே அவர்ஆவியிற்சென்று கலப்பதுவாம்.

அந்த ஆவிக்கலப்பில் ஆர்த்தெழுந்த கவிதை
தூங்கும்தமிழ்மகனைத் துயில்எழுப்பவல்லாது, தாலாட்ட விரும்பிடுமோ?
எண்ணங்கள் கோடி, ஏற்றுவது பழங்குப்பை,
இயம்புவதெல்லாம் புதுமை இது எங்கள் கவிப்பெருமை
கவிஞர்அவர்திருமுன்னர் குற்றேவல்புரிவதற்குக் கற்பனைகள் காத்திருக்கும்
கன்னித்தமிழ்ப் பதங்கள் கருத்தேந்தக் கைநீட்டும்
படருகின்ற வாழ்வினிலே பறித்தெடுத்த உவமங்கள்,
அத்தனையும் புதுமை, அவருக்கே சொந்தம்.

சிப்பிவெடித்துச் சிதறுகின்ற முத்துப்போல்
விடுக்கின்ற வார்த்தையில் வெடிக்கின்ற கருத்துக்கள்
காலத்துக்கேற்ற கவிதைகளும் காலநதிப் பெருக்கில்
எதிரேறும்ஏடுகளும் தந்ததமிழ்க்கவிஞர் தமிழர் கவியரசர்

யாருக்கும், எஞ்ஞான்றும் ஏதுக்கும் அஞ்சாத
இணையற்ற பாரதியின் இணைபிரியாத் தோழன்,
அவர்தந்த சீருக்காய் எதிர்சீர் எடுக்கின்றேம்.
கடனிறுக்க எண்ணியல்ல, காணிக்கை யென்றேதான்
வாழ்கென்று வாழ்த்துகின்றேம் வாழ்வெமக்கு வாய்ப்பதற்கு.

தற்கொலை செய்ய எத்தனிப்பது தண்டிக்கப்படவேண்டிய குற்றம் என அரசாங்கம் சட்டம் செய்து வைத்திருக்கிறது. சமுதாயமும் அதே கொள்கையைத்தான் பின்பற்றுகிறது. தற்கொலைக்கு எத்தனித்து எவ்வாறு அவ்வாபத்திலிருந்து விடுபட்ட ஒருவனைமனிதக் கூட்டம் ஏளனம் செய்கிறது. சமுதாயத்தில் அவன் ஒரு புறக்கணிக்கப்பட்டஉயிராளன் ஆகிறான். இதிலிருந்து ஒரு விஷயம் நமக்கு நன்கு புலப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும், இயற்கையான மரணம் தன்னைத் தழுவும் வரையிலும் இவ்வுலகத்தில் வாழும் உரிமைகொண்டுள்ளான்என்பதுதான் அது. தனக்குச் சொந்தமான உயிரைக்கூட அவனால் போக்கமுடியாது. இத்தகைய சட்டமும் சம்பிரதாயமும் அபிப்பிராய பேதத்திற்கிடமில்லாமல் வரவேற்கக்கூடியதுதான்.

ஆனால் இன்றைய நடைமுறையில் மனிதக்கூட்டம் பூராவுக்கும் உயிர் போகும்வரைவாழ்வதற்குச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டுள்ளனவா? காய்ச்சலால் பீடிக்கப்பட்டவனுக்கு நாவின் ருசி பார்க்கும் தன்மை கெட்டுப்போகிறது. எதுவும் ருசித்தால் கசப்பைத்தருகிறது. அவ்வாறிருக்கக் காய்ச்சல் போகக் கஷாயம் தருவதைவிட்டு நாவிற்குத் தேன் தடவும் வைத்திய முறையை பைத்தியமுறை என்று கூறத் தயங்குவார்களா? காரணத்தைக் கண்டறிந்து களைந்தெறிவது இல்லாமல் காரணத்தின்விளைவுகளை விலக்குவது விபரீதம் மட்டுமல்ல வீண்வேலையுங்கூட.

நாட்டின் நாலுபாகத்திலே பட்டினிச் சாவுகளின் பட்டியலை அன்றாடம் பத்திரிகைகள் நமக்கு அறிவித்த வண்ண மிருக்கின்றன. பஞ்ச காலத்தில் பட்டினிச்சாவுகள் தவிர்க்கமுடியாதது எனசாக்குக்கூறலாம். நான் இன்றையநிலையைப்பற்றிமட்டும்குறிப்பிடவில்லை. மனித இனம் வாழத்தொடங்கிய ஆதிப் பெருநாள்முதல் இன்றுவரை தேவையைப்பூர்த்தி செய்துகொள்ள மார்க்கம் இல்லாத 'இல்லாதார்' கூடாரமும், 'அதிகத்தார்' கூடாரமும் பிரிந்து பிரிந்துதான் தனித்திருந்து வருவதைக் காண்கிறோம். இதைத்தான் மேனாட்டுஅறிஞன் "Haves" and "Havenots" எனக்குறிப்பிட்டுள்ளான்.

மக்கள் இன்று உணவின்றி வருந்துகின்றனர். ஆடையின்றித்தவிக்கின்றனர். உழைத்து உழைத்து உருமாறிப்போகுமளவு உழைத்த பாமரன் பாதையோரத்திலே பசிக்கோரத்துக்குத்தனதுஉயிரைப் பலியாக்கிப்பிணமாகிறான். ஆதிப்பெருநாளில், அமானுஷ்ய காலத்தில்உலகம்எவ்வளவுசீர்கேடடைந்துஇருந்தது! வனவிலங்குகள் வாசஞ்செய்த காடுகளை வெட்டி, மலைகளையுடைத்து, காறுகளிலே கால்வாய்கள் வெட்டி, மண்ணிலே பொன்னெடுக்கும் மார்க்கத்தை உண்டாக்கினவன் பாட்டாளி. அவன் தனது மூச்சுப் பையை அடக்கிக்கடலிலேமூழ்கி கண்டெடுக்கும் முத்து, காட்டூர் மிட்டாதார் மகள் கனகாவின் காதிலே தொங்க, முத்துக்குளித்தமுனியன் முழங்கையைக் கட்டி மெய்யைப் போர்த்துகிறான் முழத்துண்டுகூட இன்றி. உழைப்பாளியின் உதிரத் துளிகள் வியர்வையாகப் பரிணமிக்காமலிருந்தால், வாழும்உலகம்உருவாகியிருக்கமுடியுமா?

உலகை உருவாக்கினவன் இன்றும் உயிரோடு போராடிக் கொண்டே யிருக்கிறான்! ஏன் இந்தநிலைமை? உலகம் எதனால்துன்புறுகிறது, இல்லாததாலா? என்ன இல்லை? ருஷ்ய அறிஞரும் புரட்சித்

# வாழ்வும் வறுமையும்

[மேட்டூர். டி. கே. ஆர்.]

★

தலைவர்களுள் ஒருவருமாகிய லிட்விநோவ் அமெரிக்காவில் பேசும்பொழுது குறிப்பிட்டார் பலநாட்டுப் பொருளாதார நிபுணர்களும், உலகிலுள்ள வறுமையைப்போக்கும் பிரச்னையில் தங்களதுமூளையை உடைத்துக் கொள்வதைப்பார்த்து எங்கள்நாட்டுக்குடியானவன்சிரிக்கிறான். ஏனெனில் அது அவனுக்கு அவ்வளவு சுளுவாகத் தெரியும். என்று இதைஅவர் எவ்வளவு பெருமிதத்தோடு கூறியிருக்கவேண்டும்! •

"உலகம் இன்றுவருந்தவது இல்லாததாலல்ல, அதிகத்தால்" என்று ஒரு அறிஞர்கூறியுள்ளார். எவ்வளவு அர்த்தம் நிறைந்த உண்மை! பசிகாரக்கூட்டம் ஓர்புறம்! பணக்காரக்கூட்டம் எதிர்ப்புறம்! அபரிமிதமான உற்பத்தி ஒருபுறம்! கட்டுக்கடங்காத தேவை மறுபுறம்! இவை இரண்டையும் ஒன்றுபடுத்த முடியாத திகைப்பு! இதுதானே இன்றைய உலகநிலை.

இன்று பட்டினிப் பஞ்சத்தைத் தடுக்க அரசாங்கம் கையாளும் முறைகள் என்ன? உற்பத்தி சகலரது தேவையையும் பூர்த்திசெய்ய, சரியான வினியோகம்ஆகவேண்டுமென்பதற்காக, அபரிமித உற்பத்தியை அரசாங்கம் எடுத்துக் கூட்டுறவுச்சாலைகள் மூலம் வினியோகிக்கிறது. வினியோகத்திற்கு வராமல் பதுக்கிவைத்திருப்போர் தண்டிக்கப்படுகிறார்கள். பதுக்கிவைப்பதைக்கள்ளமார்க்கட்காரர் தமது சாமர்த்தியத்தால் செய்கிறார்களே ஒழியப், பதுக்கும் உரிமைஎங்களுக்குஉண்டுஎன்றுகூறுவதில்லை. யுத்தகாலத்தில் அமிதலாபவரி எனும் பெயரால் பெரியபெரிய தொழிற்சாலைகளையெல்லாம் அரசாங்கம் தனது கண்காணிப்புக்குள்வைத்திருக்கவில்லையா? யுத்தகாலத்தில்எத்தனைகோடிரூபாய் செலவில்யுத்தக் கப்பல்களும், வெடிவிமானங்களும் யுத்த தளவாடங்களும் செய்தார்கள். செய்யமுடிந்தது. அதை அப்படியே சமாதானகாலத்தில் சமுதாய அபிவிர்த்திக்காகவும்தேவைப் பூர்த்திக்காகவும் ஏன் செய்யமுடியாது?

உணவு வினியோகம், துணிவினியோகம் முதலியவைகளுக்கு எவ்வாறு உற்பத்திச்சாதனங்களை அரசாங்க உத்தரவுகீழ்ப்படிய வைக்கிறதோ, அதைப்போலவே எல்லாத் தேவைப் பூர்த்திக்கும் ஏன் வழி காணக்கூடாது. இன்றுரயில்வேக்களெல்லாம் சர்க்காரின்கீழ் வந்துவிட்டன. இதேபோன்று பெரிய பெரிய ஆலைகள், பாங்குகள், மற்றுமுள்ள, பண்ணைகள், மடாலயங்கள், ஆதீனங்கள் இவைகளையும், ஏன்கைப்பற்றக்கூடாது? பணத்திலும் வருவாயிலும் பிர்லா, டாடா இவர்களைவிட திருவாவடுதுறை போன்ற ஆதீனங்கள் குறைவானதா? எந்த ஒரு சீமான்களின் பணப்பெட்டிகளைவிடக்குறைவான தொகையா கோவில்பெட்டிகளில் தேக்கி வைக்கப் பட்டிருக்கிறது? உணவில்லாமல் உயிரைவிடும் கஷ்டாளியைக்கண்டு கவலைப்படாத சமூகம், கடவுள்மயில்வாகனத்தின் தோகை ஒடிந்துவிட்டால்நிதிதிரட்டுகிறது! ஆலைகளுக்கரசனாகப்பிரபுக்கள் இருப்பதுபோல, ஆதீனங்களுக்கு அரசராக குருக்கள் உள்ளனர். முதலாளிக்குக் காவல் சட்டம், புரோகிதனுக்குக்காவல் சம்பிரதாயம்.

ஆகவேதான் திராவிடர் கழகம் அரசியல் கிளர்ச்சியோடுகூடவே, சமுதாயக் கிளர்ச்சியையும் பிணைத்து வைத்திருக்கிறது.

நமதுநாடு புராதன காலப் பெருமை வாய்ந்தது எனப்பூரிப்போடு சொல்லிக் கொள்கிறோம். சிகாகோவிலே நடந்தேறிய மதாச்சாரசர்வதேச மாநாட்டிலே விவேகாநந்தர்பேசிய வேதவிசாரணையை வெல்வதற்கு எவராலும் இயலவில்லை என வெல்லமொழி பேசுகிறோம். தர்மநெறியிலும்,தத்துவ விசாரணையிலும்இந்நாட்டுடன் இணைபோட எந்நாடு உளது என இறுமாப்புக் கொண்டுள்ளோம். இவைகளால் எல்லாம் நமது நூற்றைம்பது ஆண்டு கொத்தடிமைத் தன்மை நீங்கிற்றா? வறுமை ஒழிந்ததா? மடைமை மாய்ந்ததா?

தருமம் செய்தோம்— இன்னும் செய்கிறோம்—தவறான பாதையில். நாட்டின் ஆத்மார்த்த நெறி தவறானவழியிலே பிரயோகிக்கப் படுவதால்தான் தேசம் இவ்வளவு கீழ்நிலைமையிலுள்ளது என்பதை இன்னமும் உணர மறுக்கிறோம்.

அகதிகளை விதிவழியே விட்டுவிட்டு, ஆஸ்ரமவாசிகளுக்கு அன்னதானம் வழங்குகிறோம். தர்மத்தின் பெயரால் சிசுமரணத்தைத் தடுக்க சிகிச்சைச் சாலைகள் ஏற்படுத்துவதை மறந்து சிலைகளின் சிருங்காரத்துக்குச்செலவழிக்கிறோம். எண்ணற்றபொருளை "பாலின்றிப்பிள்ளையழ, வேலையின்றி நாமுமழ, வீடு முச்சூடும் அழுப்" என்பதுபோல ஒவ்வொரு வீட்டிலும் அழுகுரலை ஏற்படுத்தின வறுமையைப்போக்க மார்க்கம் தெரியாமல் வாகனங்களுக்குத் தங்கப்பூச்சு செய்விக்கிறோம், தர்மத்தின் பேரால்!

இவைகளுக்காகச் செலவிடும் பணத்தைஅறிவுபுகட்டும் கல்விச் சாலைகளுக்குப் பயன்படுத்தக் கூடாதா? இவைகளைச்செய்தால்கடவுள் சீறுமா? அந்தக்காலத்தில்அறுபத்துநான்கு லீலைகள்செய்ததாகக் கூறப்படும் ஆண்டவன் கலிகாலத்தை எண்ணித்தானோ என்னமோ கல்லாய்க் கிடக்கிறார். கோவில்களின் இருட்டு நிரம்பிய அறைகளுக்குள்ளே வைரமுடி வழங்கும் பக்தனுக்கு அக்கடவுள் நன்றியும் செலுத்துவதில்லை, அதை அபகரித்தோடும் கள்வனையும் அக்கடவுள் கடிந்துரைப்பதில்லை. கடவுட்சிலைகள் கஜினிமுகம்மதுவால் பிளக்கப்படவில்லையா?

கற்பனைமதம்மனிதசமுதாயத்தை மயக்கத்தில் ஆழ்த்திவைக்கும் ஒரு போதை வஸ்து. அச்சோம்பேறித்தனமான தூக்கத்திலிருந்து விழிப்படைந்தால்தான்மனிதனது உள்ளத்தில்புரட்சிக் கருத்துக்கள்வேரூன்ற முடியும். மதப்பிரச்னையைத் தீர்க்காமல் ஆதாரப்பிரச்னையைத் தீர்க்கப்பாடுபடுவது பகற்கனவேயாகும். இருபத்துநான்குமணிநேரமும் இயந்திரத்தின் பிணைப்பிலே இடுப்பு முறிய முறிய,இரத்தத்தின் சத்து வியர்வைத்துளிகளாக ஒழுக ஒழுக, இரத்தமும் காய்ப்பேற ஏறபாடுபடும் பாட்டாளி கூலி எனும் பெயரால் பெறும் ஒரு சில வெள்ளிக்காசுகளைத்தனது பிற்காலவாழ்வுக்குத், தனது உடல் நலஅபிவிர்த்திக்குச்சேமித்துவைக்கக்கூட மதம் விடுவதில்லை. திருப்பதிக்குச் செல்கிறான் வருடமொருமுறை மொட்டையாகித்திரும்புகிறான். உழைப்பாளி உதிரம் சொட்டச்சொட்ட உண்டாக்கிக்கொண்ட அந்தச்சிறு சேமிப்பையும் மதம் மாய்த்துவிட்டதுஎன்பதை அவன் அறிவதில்லை. பட்டினியுடன்போராடுவதுபரமன் ஏற்படுத்தியசோதனை என்று எண்ணுகிறானேயொழிய தனதுதரித்திர நிலைமைக்குக்காரணம் தனவந்தன் வகுத்திருக்கும் தந்திரத்திட்டம் எனும் விளக்கமில்லை அவனுக்கு.

ஏனைய நாடுகளிலெல்லாம் "உழைப்புச்சக்திகள்" ஏன் இத்தகைய உலர்ந்த வாழ்வு என எண்ணினர்! ஏங்கினர்! பின்பு கண்டு தெளிந்தனர். பிரபுக்களின் மாடமாளிகைகள்தான்நம்மைக்குடிசையிலே ஆழ்த்திவைத்திருக்கின்றன எனும் உண்மையை; வெகுண்டனர்; அதுவரைவழிந்த கண்ணீர் கனலாக மாறியது.

ஆனால் இங்கு மக்களை நல்வழிக்கிழுத்துப்போகும்தலைவர்களெனப்படுவோர் மதத்தைப்பற்றியேபிரஸ்தாபிப்பதில்லை. காரணம்அவர்கள் அறியாததல்ல, அறிந்தும் பராமுகம். ஏனெனில் இன்றையத்தலைவர்களெனப்படுவோரில் பெரும் பகுதி அந்த மதப்போர்வையின் கீழ்மக்களைச்சுரண்டிவந்த சூழ்ச்சிக்கும்பலைச்சேர்ந்தவர்கள் என்பதால்.

ஆதலால் வாழ்விலே வளமை காணவேண்டுமெனில் வறுமை ஒழியவேண்டும். வறுமை ஒழியவேண்டுமெனில் மக்களின் அறிவைக்கப்பியுள்ள மடைமை ஒழிய வேண்டும். மடைமைஒழியவேண்டுமானால் ஆரியக் கற்பனையாம் மதமயக்கத்திலிருந்து மனிதக் கூட்டம் விடுதலை பெறவேண்டும்.

★

மூல வியாதிகளுக்கு யௌவன பிராஷ்
கருணைக்கிழங்கு லேகியம்! ஆப்ரேஷன் பயன்தராது
மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல்,குத்து,வலி, மலபந்தம்,வாய்வு பவுத்திரக் கட்டிகள், 3-வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து சுகம் காணலாம். இதுபோல்எந்த மருந்திலும் சுகம் காணமுடியாது.
12 நாள்யௌவன பிராஷ் ரூ. 3 சரஸ்வதிவைத்தியசாலை பழனி, S. I.
ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—
T. N. சொக்கலிங்கம்பிள்ளை மருந்து ஷாப் மதுரை.
தி. மெடிகல் & ஜெனரல் ஸ்டோர்ஏஜன்ஸி பொள்ளாச்சி.
Banjo Pharmacy, மருந்துஷாப் உடுமலைப்பேட்டை.
சரஸ்வதி மெடிக்கல் ஸ்டோர், நாமக்கல்.

தந்தி:- "புருமார்க்" திருச்சி.


# திராவிட நாடு

காஞ்சி] 28—7—46 [ஞாயிறு


## புதிய போர் முகாம்

741 பழங்குடி மக்கள், பம்பாய் மாகாணத்தில் இதுவரையில் (25—7—46)கைது செய்யப்பட்டு, சிறைத் தண்டனை தரப்பட்டுள்ளனர். ஆண்கள்மட்டுமல்ல, பெண்களும்!! ஆட்சிநடத்துவதுகாங்கிரஸ்! அவர்களின் அமுலில், பழங்குடிமக்கட்குக் கிடைத்துவருவது, சிறை!

1. பிரிட்டிஷ் மந்திரிகளின் அரசியல் திட்டம் கண்டிக்கப்படவேண்டும்.
2. புனா ஒப்பந்தம் ஒழியவேண்டும்.
3. காங்கிரஸ் கட்சி, பழங்குடி மக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்புத் தரப்போகிறது, அதற்கான திட்டம் என்ன என்பது தெரியவேண்டும்.

இதுபோது பம்பாயில்துவக்கப்பட்டு, மத்திய மாகாணத்திலும் பஞ்சாபிலும் பரவக்கூடிய நிலையிலே வளர்ந்துவரும், 'சட்ட மறுப்பு'' இயக்கத்தின் நோக்கங்கள், குறிப்பாக இம்மூன்றுமாகும் என்பதை, டாக்டர் அம்பேத்கார், தமது அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டியினர் பழங்குடி மக்களுக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. நாட்டிலே, உள்ள பல கட்சிகளில் ஏதாவது சில கட்சிகளுக்குத் துரோகம்செய்தேனும், மிகுந்த செல்வாக்குப் பெற்றிருப்பதும், பிரச்சார பலத்தினால், மக்களின் மனதை எங்கிலக்கும் மாற்றுவதற்கான 'வித்தை'யில் கைதேர்ந்ததுமான, காங்கிரஸ் கட்சியைத் திருப்திச்செய்துவிட்டால்போதும் என்ற முறையைக் கையாள்வது என்று பிரிட்டிஷார் தீர்மானித்துவிட்டனர். கட்சிகளுக்குள் உள்ள பூசல்களைக் காரணமாகக் காட்டிக் காலந்தள்ள முடியுமட்டும் அதுபோலச் செய்தனர். கட்சிப்பூசல் சத்தத்தையும் மீறி, "உன் ஆட்சி வேண்டாம்!" என்று அனைவரும் கூறும் குரல் கேட்டதும், பழைய முறை இனிப்பலிக்காது என்று தெரிந்துகொண்டு, காங்கிரசின் துணையை நாடிப்பெற்று, அதனைக்கொண்டு, மற்றக் கட்சியினரின் எதிர்ப்புகளை ஒடுக்கிவிடலாம், காங்கிரசுடன் சேர்ந்து கூட்டு ஆட்சி நடத்தலாம் என்று பிரிட்டன் திட்டமிட்டு அதிலே ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டது. இந்த "வெற்றி" கிடைத்ததற்குக்காரணம், பிரிட்டிஷ்—வடநாட்டு முதலாளிகளின் முயற்சி. எனவே, டாக்டர் அம்பேத்கார், பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டியின் துரோகத்தைக்கண்டு ஆச்சரியப்படமாட்டார் என்று நம்புகிறோம். காலைவாரிவிடுவது, தாளைப்பற்றுவது, தோள்மீது கைபோடுவது, முதுகைத் தட்டிக்கொடுப்பது என்று பலவித்தைகள் பிரிட்டனுக்குத்தெரியும். இதற்குத் துரோகம், நயவஞ்சகம்,காட்டிக்கொடுப்பது, பசப்புவித்தை, என்று நாம் என்ன பெயரிட்டாலும், பிரிட்டிஷ் அரசியல் அகராதியில்இவையாவும்"ராஜதந்திரம்" என்ற ஒரே வார்த்தைக்குள் அடைக்கப்பட்டுவிடும். சோப்பு விற்கவந்த நாள் முதற்கொண்டு, சொரணைகெட்டுஇங்கே "ஜெய்ஹிந்த"! கூறிக்கொண்டேனும் இன்னும் கொஞ்சம்அகப்பட்டவரையில் சுறண்டலாம்என்று இருக்கும் நாள்வரையிலே, நாணயமாகவோ, நாட்டுப் பழங்குடி, பெருங்குடி மக்களின் நலனுக்கு ஊறு தேடாதவகையிலோ, பிரிட்டிஷ் ஆட்சி நடந்துகொண்டது என்று கூறமுடியாது. 'துப்பாக்கியில் குண்டு இருக்கும் வரையில் சுட்டேன்!" என்று ஆணவத்தோடு பேசிய ஜெனரல்டயரை ஏவிப்பஞ்சாப் படுகொலைநடத்திய ஏகாதிபத்யம், நாட்டு மூலாதாரப் பிரச்னைகளுக்கு மூடியிட்டுவிட்டுக், காங்கிரசை எப்படியாவது சரிப்படுத்திவிடுங்கள்,மற்றவர்களைப்பற்றிய அக்கரை நமக்கு வேண்டாம், என்று உத்தரவிட்டு, மூன்றுமந்திரிகளைஇங்குஅனுப்பிவைத்ததிலேஆச்சரியப்படக்காரணமில்லை. வங்கம், மகாராஷ்டிரம், கர்நாடகம், பாஞ்சாலம்முதலிய ஒவ்வோர்பகுதியையும்பிரிட்டிஷ்படைகள்மட்டுமல்ல, பிரிட்டிஷார்கையாண்ட துரோகத் திட்டமும் சேர்ந்துதான், பிடிக்க முடிந்தது. எனவே, பரம்பரைபரம்பரையாக ஏந்தவித்தையிலே, பிரிட்டன் கைதேர்ந்ததாக இருந்து வந்திருக்கிறதோ, அந்தவித்தை, சூரியன் அஸ்தமிக்காத ராஜ்யத்தைப் பிரிட்டனுக்கு வாங்கித் தந்ததோ, அதேவித்தையை இப்போதும்காட்டினார்கள். சுபாவம் சுலபத்தில் மாறுமா! அதிலும்அதனால் இலாபம் இருக்கும்போது, ஏன் மாற்றிக்கொள்ளவேண்டுமென்றஎண்ணம் ஏற்படப்போகிறது! பிரிட்டிஷார், "தர்மநியாயப்படி" நடப்பார்கள் என்று, யாராவது எண்ணியிருந்தால், அவர்கள் அவ்விதம் எண்ணினது தவறேயொழிய, பிரிட்டிஷாரின் போக்கிலே தவறு இல்லை, அந்தப்போக்குத்தான் சுறண்டிவாழ விரும்பும் எந்த ஏகாதிபத்யமும் கையாளும்போக்கு,நிலைமை சரக்கு! எனவே, பழங்குடிமக்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைக் கண்டிக்க முன்வந்ததை நாம்வரவேற்கிறோம். பழங்குடி மக்களுக்கு எந்தவகையான பாதுகாப்புத்தரக் காங்கிரஸ் திட்டமிட்டு இருக்கிறது என்பதை அறிவதும், இந்தப்'போரின்' நோக்கம்என்கிறார்டாக்டர். இது, இரண்டாம்தரத்துக்குத்தள்ளப்பட்டு,பிரிட்டிஷார் பழங்குடிமக்களைக்காட்டிக்கொடுத்துவிட்டனர் என்பதை உலகுஅறியச்செய்வதையே, முதலாவதும், முக்கியமானதுமான நோக்கம் என்றுக்க வேண்டும். எனவே, "போரை" த்தொடர்ந்து நடத்துவதுடன், பம்பாய் சட்டசபை எதிரே கிளர்ச்சி செய்யும் முறையைமாற்றி, காங்கிரசைநமது 'ஏஜெண்ட்' ஆக நியமித்து விட்டோம், இனி நமக்கென்ன குறை என்று இறுமாந்துகிடக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் பிரதிநிதியாக விளங்கும் வெள்ளைக்காரக் கவர்னர் கொலு வீற்றிருக்கும் மாளிகை வாயற்படிஎதிரே 'போர் முகாம்' அமைக்கப்படவேண்டும் என்று நாம்டாக்டருக்குயோசனை கூறுகிறோம். அப்போது உலகு ஒரு அற்புதக் காட்சியைக் காணமுடியும்; வெள்ளைக்கார ஏகாதிபத்யத்துடன் வீரமரபினர் போர்தொடுப்பதும், அந்தப் போரின்போது, வெள்ளைக்கார ஏகாதிபத்யத்தைக் காப்பாற்றக் காங்கிரஸ், போலீஸ், ராணுவ சகிதம் முன்வருவதுமான காட்சியைக்காணமுடியும்;எனவே புதியபோர் முகாம் அமைக்கும்படி டாக்டரை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

## முடியுமானால்.....!

"இந்த ஜஸ்டிஸ்கட்சியும் ஒரு கட்சியா? ஜனங்களின் கட்சியா இது? ஜரிகைக்குல்லாக்காரர்கட்சி! ஜெமின்தார்கள் கட்சி! பாரேன், அதற்குத் தலைவர்கள் யார்? பொப்பிலிராஜா! குமாரராஜா! இப்படித்தான் ஒரே ராஜமயமாக இருக்கும். இதுவா ஜனங்களுக்கான கட்சி?" எனறு பேசினாயே—பேசினாய் என்றுசொல்வது! இடிமுழக்கம் செய்தாயே, காங்கிரஸ் தோழனே! கவனம் இருக்கிறதா? அதே பொப்பிலியும், குமாரராஜாவும், இப்போது, காங்கிரஸ் கட்சியின் சர்வ ஆதிபத்ய ஆட்சியின் கீழ் உள்ள சென்னை சட்ட சபையினரால், அரசியல் நிர்ணயசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஏன்? என்னிடம் சொல்லவேண்டாம்! நீயேயோசித்துப்பார், தனியாக, ஆர அமர இருந்து.

ஜெமீன்தாரர்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு, அவர்களிடம் 'பணம்' பறித்து வாழ்கிறார்கள் ஜஸ்டிஸ் கட்சியார் என்றுகூடச் சொன்னாய். இப்போது நான் அதனைத் திருப்பிச்சொல்கிறேன்என்று எண்ணிக் கோபிக்காதே சும்மா, உனக்குக் கவனமூட்டினேன்.

ஜனங்களின் விஷயம் இந்த ஜரிகைக் குல்லாக்காரருக்கு என்ன தெரியும்? என்று கேலி செய்தாய் முன்பு. மறந்துவிட்டிருப்பாயே என்பதற்காகக் கவனப்படுத்தினேன். இப்போது உனது காங்கிரஸ் கட்சியாரே, அதே ஜரிகைக் குல்லாக்காரரை, ஜாம் ஜாமென, மேளதாளத்தோடுவரவேற்று, அரசியல்நிர்ணயசபைக்கு அழைத்திருக்கிறார்கள். ஜனங்களின் விஷயமே தெரியாதஜரிகைக்குல்லாக்காரரை, ஏனப்பா இப்போது பாரதமாதா பாண்டு வாத்யத்தோடு வரவேற்கிறது? என்னிடம் சொல்லவேண்டாம்! நீங்களே ஒருவருக்கொருவராவது ஒய்வு இருக்கும்போது பேசிக்கொள்ளுங்கள்.

ஆமாம், பார்ப்பனர்களுக்கு நாங்கள் மட்டும் இடம் கொடுத்துவிடுவோமா என்று பேசினாயே! இப்போது ஏனப்பா, பார்ப்பனர்கள் அவ்வளவுபேர், அரசியல் நிர்ணயசபைக்குள்புக இடம்கொடுத்தீர்கள்? கேள்வி கேட்கிறேன் என்று எண்ணிக் கோபிக்க வேண்டாம்பா, யோசியுங்கள், மனம்நிம்மதியாக இருக்கும்போது.

அப்பா! ஆற்காட்டு இராமசாமி முதலியாரும், கோவை சண்முகம் செட்டியாரும், பெரிய அறிவாளிகள், ஆனால் காங்கிரசிலே இல்லை, ஆகையினாலேதான் அவர்களைக் கண்டிக்கிறோம், என்று முன்பெல்லாம் சொல்லுவாயே, அவர்களைப்போலவே காங்கிரசிலும் இல்லாமல், பட்டம் பதவியும் பெற்று வாழ்ந்த சர். அல்லாடி, சர். கோபாலசாமி ஐயங்கார் போன்றவர்களை மட்டும் ஏன், இப்போது அரசியல் நிர்ணயசபைக்குத்தேர்ந்தெடுத்தீர்கள்?

"காங்கிரசிலே இருந்தாலும்சரி, வெளியே இருந்தாலும்சரி, நம்மனவாளை நீக்கி ஒரு காரியமும் நடக்காது,வேணுமானுபாரும்" என்று, காப்பியை ஆற்றிக்கொண்டே அம்பி சோமு, அருணாசல ஐயருக்குக் கூறுகிறான், அடுத்த பெஞ்சியிலே அரிஜன சேவா சங்கத் தலைவரும் ஆறு வருஷம் சிறை சென்ற தேசபக்தருமான, அம்பலவாணப் பிள்ளை, ஐயரைக்கூப்பிட்டு, 'சாமி! அரைகப், அஸ்கா காப்பி கொடுங்கோ! என்று கேட்கிறார் அப்பா. அல்லாடிகள் வேண்டும் ஆற்காடு கூடாது என்பது, எந்த நியாயப்படி சரி, எந்த அரசியல் தர்மப்படி சரி, என்று யோசித்ததுண்டா? யோசித்துப்பாரப்பா! நான்சொல்கிறேன் என்பதற்காக யோசிக்காமல் விட்டுவிடாதே. யோசனை செய்துபார்! என்னிடம்கூடச் சொல்லவேண்டாம். உன்மனதுக்கு நீயே சமாதானம் கூறிக்கொள்ள முயற்சி செய்து பார், முடியுமானால்.

## பாரம் ஏறுகிறது!

பிரகாசம்காரு!,

பாரம் ஏறுகிறது, அதிக நாள் தாங்காது. அச்சு முறிந்துவிடும். தங்கள் ஆட்சியின் பலனாக இதுவரை மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள பார மூட்டைகளின் கணக்கு ஒருசமயம் கவனமில்லாமல் போய்விட்டது என்று எண்ணுகிறேன். பார்த்துக் கொள்ளும் கணக்கை,

1. பூரண மதுவிலக்கு செய்யவில்லை.
2. விற்பனை வரி தொலையவில்லை
3. கோயில்கள் திறக்கப்படவில்லை.
4. நாட்டிலே அமைதி சரியாக இல்லை.
5. இல்லாத இந்து-முஸ்லிம் தகராறுகிளப்பிவிட்டிருக்கிறது.
6. தொழிலாளர்கள் மனது நிம்மதி இல்லை. எங்குபார்த்தாலும் அவர்களுக்கு முதலாளிகளால் தொல்லை வருகிறது.
7. கல்வியில் பின்னணியில் உள்ளவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்காக வகுக்கப்பட்ட திட்டத்தைப் பாழ் செய்து, பார்ப்பனவகுப்பு மட்டுமே பயன்படும்படியான முறை கையாளப்படுகிறது.
8, போதாக்குறைக்கு, ஓடிப்போன கட்டாய இந்தியைத் தேடிப்பிடித்து இழுத்துவந்து நிலைக்கவும் யோசனை இருக்கிறதாம்.

பிரகாசம்பந்துலுகாரு! பாரம் ஏறுகிறது, அச்சுமுறியும் என்பது கவனத்திலிருக்கட்டும், ஆச்சாரியார் ஆட்சி அச்சை விட, இது அதிக வலுவுள்ளதாக இருக்கமுடியாது. சொன்னேன் நல்லவாயிற்றென்று—கேட்பதும், தள்ளிவிடுவதும் உமது இஷ்டம். நஷ்டம், நமக்கில்லை.

### காஞ்சி தையற்காரர்கள் சங்கம்

7—7—46 ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு பெரியகாஞ்சிபுரத்தில் கே. முருகேசமுதலியார் தலைமையில் தையற்தொழிலாளர் கூட்டம் நடந்தது. அதுசமயம் தையற் தொழிலாளர் சங்கத்திற்கு நிர்வாகஸ்தர்களாக பின்கண்டவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் கே. முருகேசமுதலியார் உபதலைவர் பூங்காவனநாயகர், ஆர். ராஜகோபால்நாயுடு பொக்கிஷதார், பி. வி. ஸ்ரீராமுலு காரியதரிசி, எம். கண்ணன் உபகாரியதரிசி.

### செங்கற்பட்டு மாவட்ட மாநாடு

காஞ்சிபுரம் ஒலிமுகம்மது பேட்டையில் 13, 14-7-46 தேதிகளில் தோழர் N. அருச்சுனன் தலைமையில் வெகுசிறப்புடன் நடைபெற்றது இருநாட்களிலேயும் சிவாஜிகண்ட இந்துராஜ்யம், சந்திரோதயம் ஆகிய இருநாடகங்களும் நடைபெற்றது.

## வெற்றி-சிலபாடங்கள்

ஒருதிங்களாக நடைபெற்றுவந்ததும், பதினாலாயிரம் ஏழைக் குடும்பங்களைத் திகைக்கச்செய்ததுமான, சென்னை பக்கிம்ஹாம் கர்னாடிக் ஆலைத்தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் முடிந்து, சமரசம் ஏற்பட்டு, மீண்டும் தோழர்கள் வேலைக்குச்செல்லும்நிலைமையேற்பட்டதுகுறித்து நாம்மிக மகிழ்கிறோம். தொழிலாளர்கள் அடைந்துள்ள வெற்றியைப் பாராட்டுகிறோம். இந்த வெற்றி அளிக்கும் சில பாடங்களைத்தோழர்கள் மறவாமலிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். முக்கியமானபாடம், சங்கத்தலைவரும் அறிவாற்றல் மிக்கவருமான தோழர் அந்தோணி அவர்கள்எடுத்துக்காட்டிய, ஒற்றுமையே வெற்றிதரும் என்பதுதான். சென்னை மாகாணத்திலே மட்டுமல்ல, இந்தியஉபகண்ட முழுவதிலுமே,தங்கள் தொழிற்சங்கத்துக்கீடானது வேறொன்றில்லை என்பதையும், தொழிலாளர் வரலாற்று ஏட்டிலே, முதல் அத்யாயத்திலேயே, முதல்பகுதியில் தீட்டப்பட வேண்டிய முக்யத்துவம்வாய்ந்தது இந்தச்சங்கம் என்பதையும், தோழர்கள் மனதிலிறுத்தி, எந்தஒற்றுமை வெற்றியைப் பெற்றுத்தந்ததோ அதனைப் பலப்படுத்த வேண்டும் அரசியல் சதுரங்கப்பலகையிலே "பாய்ச்சிகை" ஆகாமல், தன் காலில்நின்று, பொதுமக்களின் ஆதரவைப்பெறுவதை நோக்கமாகக்கொண்டு வேலைசெய்யவேண்டும். அந்த முறையே இதுபோது ஓரளவுவெற்றியைத் தந்தது.

சுயராஜ்யத்துக்காகப் போரிடுவதாகச் சொல்லிக் கொள்பவர்கள், உண்மையிலேயே போரில் ஈடுபடுபவர்கள் என்றபோதிலும், அவர்களெல்லாம், ஏழைப்பங்காளர், தொழிலாளர் தோழர்கள் என்று நாம் கருதிவிடமுடியாது என்பதைத் தோழர்கள் இந்தக் கிளர்ச்சியின்போது உணர்ந்துகொண்டனர். இந்தப்பாடம், முக்கியமானது. நடப்பதோ காங்கிரஸ் ஆட்சி! காங்கிரசோ அடக்குமுறையை எதிர்த்துச் சிறைவாசம்செய்த "சீலர்களின்" கட்சி! ஆனால் அப்படிப்பட்ட காங்கிரஸ் ஆட்சியிலே, நாமோ, முதலாளியின் முரட்டுப்பிடிவாதத்தை எதிர்த்ததற்காகச் சிறையிலே தள்ளப்பட்டோம்; விருந்து வீட்டுக்குள்ளே, வெளியே அரைப்பட்டினிக்காரன் என்ற முறையிலே இருக்கிறது நம்நிலைமை என்பதை இந்தக்கிளர்ச்சியின்போது சிறையில்தள்ளப்பட்ட தோழர்கள் எண்ணமலிருந்திரார். பெருமூச்சும், கண்ணீரும் கிளம்பாமலிருந்திராது, தாய்மார்களின்மனம் குமுறியிருந்திருக்கும். எனவே, காங்கிரசாட்சி என்றால், அது பாட்டாளியின் பாதுகாப்புக்கான ஆட்சி என்றுகூறிவிடமுடியாதுஎன்றபாடமும்பெற்றிருப்பர்.

சுயராஜ்யத்துக்காகப் பாடுபடவும், போரிடவும், போரிலே, பல ஆயிரக்கணக்கான பாட்டாளிமக்களைக் குதிக்கச் செய்யவும், காங்கிரசால் முடிந்ததே பொழிய, அதேகாங்கிரசால், முதலாளித்வத்தைத் தாக்கவோ, வெள்ளை முதலாளித்துவத்தை விரட்டவோ முடியவில்லை என்பது இந்தக்கிளர்ச்சியின்போது பளிச்சென விளங்கிவிட்டது. டவுன்துரையின் அதிகாரம், அட்வைசர் காலத்திலே இருந்ததற்கு அணுவளவும், பிரகாசம் காலத்திலே குறைவாகி விடவில்லை. தோழர்கள் இதனைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். இதிலே அடங்கியுள்ளபாடம், மிகமுக்கியமானது.

வடநாட்டுக்காரர்சிலர், மொழிநடை நினைப்புஆகியவற்றால் நம்மில்வேறுபட்டவர்கள் ஆலையிலே இருந்ததால் வந்தஅமளியேஇது. இதன்உட்பொருள் என்ன? அவர்கள்வேறு, நாம்வேறு. நமது எண்ணம்பாடு,மொழி,நடைநொடிவேறு, அவர்களுடையதுவேறு இருவரும்வேறுவேறுவகை, வேறுவேறு இனம். எனவே தான், நம்மவர்மீது அவர்களின் விழி கோபத்தையும் அலட்சியத்தையும் கக்கிற்று தொட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும் சிறுகுழந்தையின் கன்னத்தைச் சிற்றெறும்புகடித்தால், குழந்தை எப்படி அலறிஅழுது துடிக்குமோ, அந்தஅளவுக்குத்தான், "இனபேதஉணர்ச்சி" இம்முறைவெளிப்பட்டது. குழந்தைவீறிட்டு அழுவதற்குக் காரணம், எறும்புகடித்ததே என்பதைஅறிந்து, எறும்பை விரட்ட வேண்டியது தாயின்கடமை. மாற்றாந்தாயோ அழுகிறகுழந்தையின் முதுகில் ஒருதட்டுத்தட்டி, ஆவேசத்தோடு தொட்டிலை ஆட்டிவிடுவாள். அது நடந்தது இந்தவேலைநிறுத்தத்தின்போது. தோழர்கள் இந்தப்பாடத்தையும் மறக்காதிருக்க வேண்டும். ஒற்றுமைவளர்ந்து, வெற்றி மேல் வெற்றி கிடைக்கட்டும் என்று வாழ்த்தி இப்போதுபெற்ற வெற்றிக்காகத்தோழர்களை நாம் மனமாறப்பாராட்டுகிறோம்.

## தபால் தொழிலாளர் குறைகள்

உழைப்புக்கேற்ற ஊதியமில்லை, வாழ்க்கை நடத்த வசதியில்லை. இது, இன்று, எங்கும், எல்லோராலும்பேசப்படும் அவலங்களுக்காகப் பலவகைப் போராட்டங்கள்நடைபெற்றும்வருகின்றன. பஸ்,டிராம் முதலியசாதனங்கள் முதல் ரெயில்வே, தபால்முதலிய பெரும் ஸ்தாபனங்கள்வரை வேலைநிறுத்தம். அகிலஇந்தியரெயில்வே தொழிலாளரின் அசைக்கமுடியாத ஒற்றுமையின், கட்டுப்பாட்டின் காரணமாக அவர்கள் விடுத்த முதல் அறிக்கையைக்கொண்டே வேலை நிறுத்தம் செய்யாமலேயே அவர்கள் குறைகள் ஓரளவுக்குத்தீர்க்கப்பட்டு விட்டன. அஞ்சல் நிலைய ஊழியர்கள் (தபால் தொழிலாளர்கள்) இப்போது ஆரம்பித்தனர் வேலை நிறுத்தத்தை. பலதரம் பேசியும், சொல்லியும் பல அறிக்கைகள் விடுத்தும் பயன் பெறுமற்போகவேதான் வேலை நிறுத்தம் என்னும் கடைசி கருவியை அவர்கள் கையாள வேண்டியதாயிற்று. பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் தபால், தந்திகள் எவையும் எடுக்கப்படவில்லை, விடுக்கப்படவுமில்லை. டெலிபோன் போக்குவரவுக்கும் தடை ஏற்பட்டிருக்கிறது. அதே நிலைமைதான் சென்னையிலும். சுமார் 12-நாட்களாகத் தபால் நிலையங்களில் சரிவர அலுவல்கள் நடைபெறுவதில்லை. அதனால் பொதுமக்களும் வியாபாரிகளும் அடைந்த, அடையும் கஷ்டநஷ்டங்கள் அளவிடமுடியாது. ரெயில்வே தொழிலாளர்களைப் போல் தபால் ஊழியர்களும் இந்தியாமுழுவதற்கும் ஒரே கட்டுப்பாடாக, ஒற்றுமையாக வேலை நிறுத்தம் செய்யப்போவதாக ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தால் வேலை நிறுத்தம் செய்யாமலேயே அவர்களுக்கும் ஒருவாறு பலன் கிடைத்திருக்கும். எனினும் இப்போது அவர்களுடைய பலம் அதிகரித்து விட்டதென்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இனியும் சர்க்கார் கவனியாது, அசட்டையாகயிருந்தால் நிலைமை மிக மிகமோசமாகிவிடும். வேலைநிறுத்தத்தின் போது வேறு ஆட்களைக் கொண்டு வேலைகளைச் செய்யச்சொல்வதும், அதனால் நிலைமை சரியாய் விட்டது என உண்மையைத் திரித்துக் கூறுவதும் நீதியும் நேர்மையுமாகா. ஸ்டிரைக்செய்வது சட்டவிரோதம் என்று பயங்காட்டுவதிலும் பயனில்லை. அதற்கு மக்கள் மருளமாட்டார்கள். தங்கள் உரிமைகளைப்பெற எத்தகைய தண்டனைகளையும், எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராயிருக்கிறார்கள். நாடெங்கும் நடத்தப்படும் இவ்வேலை நிறுத்தத்தைப்போக்க அரசாங்கத்தார் உடனடியாக ஆவன செய்ய வேண்டும். மேலும் மேலும் இதைநீடிக்கவும் தொடர்ந்து நடத்தவும் செய்யவிடக் கூடாது. அஞ்சல் ஊழியர்களிடம் அனுதாபம்காட்டுமுகத்தான் பல்வேறுதொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இதனால் நாட்டுமக்களின்நலன்கள் பலவகைகளிலும் நசுக்கப்படுகிறதென்பதை அதிகாரிகள் அறியவேண்டும். இனியும் மத்யஸ்த நீதிபதியின் சிபார்சுகளை ஏற்றுக்கொள்கிறோம் என்பதாலோ, வேறு சமாதானங்கள் கூறுவதாலோ இக்கிளர்ச்சியை அடக்கமுடியாது.

## ரங்கோன் ராதா

6-ம் பக்கத் தொடர்ச்சி

இரண்டு மாதம் நான் தலை முழுகவில்லை! மகனே! அந்த வார்த்தையின் முழுப்பொருளும், அந்தப்பொருள்தரும் களிப்பும், ஆண்களுக்குத் தெரியாது— அவர்களால் அந்தப்பொருளை முழுவதும் புரிந்துகொள்ளவோ ரசிக்கவோ முடியாது. அது, பெண்களின் வாழ்க்கையிலே மகத்தானதோர் வெற்றி! அந்த ஒரு வெற்றிதான், அவர்கள் வாழ்க்கையோடு போராடிப் போராடிப் பெறுவது. வேறு எதைக்கண்டார்கள்? பல வெற்றிகள் இருந்தால், மகிழ்ச்சிபங்கிட்டு விடவேண்டிவரும். அது ஆண்களுக்கு! ஒருபுதிய தோட்டம் வாங்கினோம், புது வீடு கட்டினோம், புதுவியாபாரம் செய்தோம், என்று எத்தனையோ வகைவகையான வெற்றிகள் ஆண்களுக்குக்கிடைக்க வழி இருக்கிறது. பெண்களுக்கு அது இல்லை! அவர்கள் அடையக்கூடிய ஒரே வெற்றி, குழந்தை!! தலைமுழுகவில்லை, என்றால், அந்த வெற்றிக்கு அருகதையாகிவிட்டார்கள் என்றுபொருள். இன்ப வாழ்க்கையின் "பலனைக்"காணப்போகிறார்கள்! பெண், மனைவியானாள்! மனைவி தாய் ஆனாள்! பூத்துக்காய்த்துக் கனி குலுங்கிற்று என்பதுபோல. அத்தகைய வெற்றி எனக்குக்கிடைக்க இருந்தது. மாதம் இரண்டு! வாயிலே இலேசான கசப்பு! மாலைவேளைகளில் கொஞ்சம் தலை சுற்றும். கைகால்களிலே ஒருவிதமான ஓய்ச்சல்! ஆமாம்! துளசிக்கு அது தெரிந்துவிட்டது. ஆணா பெண்ணா என்று தர்க்கிப்பாள், என்னிடம். நான் பிடிவாதமாகப் பெண் என்பேன். அவள், வேடிக்கையாக, என் வயிற்றண்டைத் தன்காதை வைத்துக்கொண்டிருந்துவிட்டு, "அக்கா! நிச்சயமாகப் பெண்ணல்ல! ஆண்!" என்றுகூறுவாள். 'உன்னிடம் பேசினானா? என்று நான் வேடிக்கையாகக்கேட்பேன், ஆமாம்! 'என்பாள் துளசி. "எனக்கு ஒரு பெண் கொடு மாமி!" என்று கேட்டிருப்பான் என்று நான் அவளைக்கேலி செய்வேன். அவள் சளைக்கமாட்டாள். "அதுபோலத்தான் கேட்டான். ஆகட்டுமடா கண்ணு! நீ வளர்ந்து பெரியவனாகி,தாத்தாவாகிறபோது வந்துகேள் பெண் தருகிறேன் என்று நான் சொன்னேன்" என்பாள். அதாவது தன்னைக் கிழவனுக்கு மணமுடித்தார்கள் என்பதைப்பற்றி வேடிக்கையாகக் குறிப்பிடுவாள். இப்படி நாங்கள் பொழுது போக்கிவந்தோம். அப்பாவுக்கோ இந்தச்சேதி புதிய மனக்குழப்பத்தை உண்டாக்கிவிட்டது; அந்தக் குழப்பத்தைப் பேயோட்டுபவன் அதிகப்படுத்திவிட்டான். பேய் பிடித்திருக்கும் சமயத்திலே, கருத்தரித்தால் நல்லதா கெட்டதா என்று என் அப்பா கேட்க, அவன், ஒருவிதத்திலே நல்லது ஒருவிதத்திலே கெட்டது என்றான். "எந்தவிதத்திலே நல்லது, எந்தவிதத்திலேகெட்டது என்று அப்பாவும் கேட்கவில்லை, அவனும் சொல்லவில்லை! "கெட்டதாகமுடியாதபடி..................." என்றுபயந்தபோய் அப்பா கூறினர். அவன் ஏதோ ஆண்டவனின் அபிப்பிராயத்தை நேரடியாகக்கண்டு அறிந்தவன்போல, ஆண்டவன் ஒருகுறையும் செய்யமாட்டார்" என்று தைரியம் கூறிவிட்டு, "இருந்தாலும், எட்டாம் மாதம்வரையில்குழந்தை இங்கேயே இருக்கட்டும். அப்போதைக்கப்போது இருக்கும் நிலவரத்துக்குத் தக்கபடி, பூஜைகள் செய்துவருகிறேன்" என்றுசொல்லிவிட்டான். ஆகவே,நான், தங்கத்தின் எதிரே சென்று, "பைத்யக்காரி! நான்தாயாகப்போகிறேன்,என்னை இனிச்சாமான்யமாகக் கருதிவிடாதே! வார்சு பிறக்கப்போகிறது ஜாக்ரதை" என்று பேச்சினுல் அல்ல, பார்வையாலேயே தெரிவித்துவிடவேண்டும் என்று ஆசைகொண்டதற்கு அணைபோடப்பட்டுவிட்டது. இன்னும் ஆறுமாதங்களுக்கு இங்கே இருந்தாக வேண்டும்! துளசி இருக்கிறாள், பொழுது போக்குக்கு, ஆனால், தங்கம் அங்கே இருக்கிறாள் தலைகால்தெரியாமல் கர்வத்தோடு. நான் "தலைமுழுகாது" இருக்கிறேன் என்ற விஷயம் தெரிந்ததும், அவளுடைய "கொர்வம்" குலையுமல்லவா! அதைப் பார்க்கவேண்டுமே என்ற ஆவல் என்னைத்தூண்டிற்று, "இருக்கட்டும், இருக்கட்டும். வருகிறேன் தங்கம்!" என்று, துளசியைத் தங்கமாகக்கொண்டு, பேசினேன்! அதிலே ஒருசந்தோஷம் எனக்கு!

"அவரிடமிருந்து கடிதம் வந்ததா?" இந்தக்கேள்வியை ஒவ்வோர் நாளும் கேட்பேன் அப்பாவிடம். ஏன்கேட்கிறேன் என்பதைத் தெரிந்துகொள்ளாமலேயே, அவர், 'வந்தது—இல்லை"என்று இரண்டிலோர் பதில்கூறுவார். நான் தலைமுழுகாமல் இருப்பதைப்பற்றி அவருக்கு எழுதினீர்களா? அவர் என்ன பதில் எழுதினார்'"என்று நானாக, அப்பாவை எப்படிக்கேட்பது. துளசிதான் இதற்கும் யோசனை சொன்னாள்.

"அக்கா! நீயே தான் அவருக்குக் கடிதம் போடுவதுதானே" என்றாள்.

"போடிபோ! எப்படி? வெட்கமாக இல்லையா எழுத?'

"எழுத வெட்கப்பட்டுப்பலன்?"

"நான் மாட்டேன் போடி. எப்படி இதை எழுதுவது" இப்படிக் கொஞ்ச நேரம் வாதாடினேன் துளசியிடம், (என்னைத்தான் வக்கீல் பேய்பிடித்துக்கொண்டிருக்கிறதே!) பிறகு அவள்ஒருயோசனை சொன்னாள். அதாவது சாப்பாடுசரியாகப் பிடிக்கவில்லை, வாய்க்கசப்பாகவும் இருக்கிறது, யாராவது லேடிடாக்டரைக்கேட்டு, கர்ப்பவதிகளுக்கு வலிவு தரும் டானிக்வாங்கி அனுப்பிவைக்க வேண்டும், என்று ஒருகடிதம் எழுதிப் போடு, அதிலிருந்து அவர் தெரிந்துகொள்கிறார் என்றாள். சாமர்த்தியமல்லவா, அவள்யோசனை. அதன்படியே கடிதம் போட்டேன். நாலாம் நாள், பதில் தபால்வந்தது. கவர்! நான் சாப்பிடடுக்கொண்டிருந்தேன். துளசி, கவரைக்காட்டினாள். அவருடைய கைஎழுத்துதான். என்முகம் மலர்ந்தது. பதில் கிடைத்துவிட்டது நாலே நாளில். கடிதம் போட்டோம், உடனே பதில்கடிதம் அனுப்பி இருக்கிறார். என்மீது அவருக்குக் கோபம் இல்லை, அன்பு ஏற்பட்டுவிட்டது; ஆமாம், தாய் ஆகப்போகிறேன், இனியுமா என்னிடம் வெறுப்பாக நடந்துகொள்வார். அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு வந்துகடிதத்தைப்படித்தாக வேண்டும் என்ற ஆவல். அவசரமாகச்சாப்பிட்டாலோ துளசி கேலி செய்வாள். ஆகவே, கடிதத்தைப்படிக்க வேண்டுமென்பதிலே அவசரம் கொள்ளாதவள்போல, மெள்ளச் சாப்பிட வேண்டி இருந்தது. சாப்பாடு முடிந்து கூடக் கொஞ்சம் காலதாமதமும்செய்தேன், இல்லையானால் அவள் கேலிபேசுவாள்.

"துளசி! என்ன எழுதி இருக்கிறார் கடிதத்தில் என்று பார்க்கலாம் கொடு" என்று கேட்டேன்; கொடுத்தாள். கடிதமல்லடா கண்ணே! கடுவிஷம் இருந்தது அதிலே!

### "தலைமுழுகிவிட்டேன்"

இவ்வளவே, அவர் அனுப்பிய கடிதத்தில் இருந்தது! (தொடரும்)


உறையூர்

### எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-கெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான-உடை, சுத்தமான-சரிகை, உயர்தரமான-ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.


**காஞ்சிபுரம் டி. மு. கோர்ட்டு**

O. P. 45 of 1946,

மனுதார். N. சிவராம முதலியார்.

காலஞ்சென்ற V. M. நாராயணசாமி முதலியாருக்கு United India Life Insurance Co.' 13644 Policy தகை சேரவேண்டியதை மனுதாரராகிய அவருடைய குமாரர் அடையபாத்தியஸ்தர் என்று மனு போட்டிருப்பது 5—8—46ல் விசாரணைக்கு வருகிறது என்பதை இதனால் தெரிவிக்கப்படுகிறது.

K. V. ஸ்ரீனிவாசாசாரியார்,
மனுதார் வக்கீல்.

25-7-46.

# நம்பிக்கைதான் உலகப் பாதுகாப்புக்கு உண்மையான அடிப்படை

## "நால்வர்" தகராறுக்குக் காரணம்

—(W. N. ஜவர்)—

வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு பாரிசில் நடந்து கொண்டிருக்கையில் வெறும் சோர்வைத்தவிரப் பலன் எதையும் விளைவிக்க வகையில்லாதபடி விவாதம் மும்முரமாக இருந்ததற்கு உள்ளீடான காரணம்நம்பிக்கையின்மைதான்.

இக்கஷ்டமனைத்திற்கும் ஆதிகாரணம் மேற்கத்தி நாடுகள் ரஷ்யாவைச் சந்தேகித்ததும், அது போலவே ரஷ்யாவும் சில மர்மமான காரியத்தை உத்தேசித்து மேற்கத்தி நாடுகள் தந்திரமாக நடக்கின்றன என்றுகருதி அவைகளைச்சந்தேகித்ததும்தான்.

இருசாரார் நினைப்பும் தப்புத்தான் என்று நான் நினைக்கிறேன். ஆனால், இவ்வித சந்தேகங்கள் மிக அற்பமான காரணங்களிலிருந்து கூடத் தோன்றிவிடுகின்றன என்பதைப்பார்த்தால் இன்றைய சர்வதேச நிலவரத்தில் நம்பிக்கை விஷயம் எவ்வளவு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததென்பது விளங்கும். உதாரணமாக, சமாதான மகாநாட்டுக்கு பிரெஞ்சு சர்க்கார் உடனடியாகவே அழைப்பை அனுப்பிவிடலாமா, அல்லது, மகாநாட்டு அழைப்பு, நடைமுறை ஆகியவைகளைப் பற்றியமட்டிலாவது நால்வரும் ஒரு உடன்பாட்டுக்கு வருவதுவரை அழைப்பனுப்புவதை நிறுத்தி வைக்கவேண்டுமா என்பதுகூடச் சந்தேகத்துக்குக் காரணமாக அமைந்துவிட்டதைக்கூறலாம்.

பர்ன்ஸ், பெவின், பிடால்ட் ஆகியோர் உடனடியாகஅழைப்பு அனுப்ப வேண்டுமென்றனர். நடைமுறை எப்படி என்பது முதலில் நிர்ணயிக்கப்படவேண்டுமென்று மாலடாவ் வற்புறுத்தினர்.

மகாநாடு கூடும்தேதியைச் சீக்கிரமாக வைப்பதுபற்றி பர்ன்ஸ் வற்புறுத்திக்கூறிய வகையைப் பார்த்ததும் மாலடாவுக்குத் திகைப்பு ஏற்பட்டுவிட்டது. ஏதோ மர்மமான காரணமிருக்கும்என்று அவருக்குப்பட்டது. தம்மைஅவசரப்படுத்துவதாக அவர் சந்தேகித்தார். அவ்வளவு அவசரமாகத் தம்மை எங்கு இட்டுச் செல்கிறார்கள் என்று தெரியாது பிரமித்து நின்றார்.

அதனால் அவர் மனதில் ஏற்பட்ட மாறுதல் அஸ்ாதியானது தான். நடைமுறைபற்றி உடன்பாடு ஏற்படுவதற்கு முந்தி அழைப்பு அனுப்பப்படுவதை ஒப்புக்கொள்ளவே முடியாது என்று பிடிவாதமாய் மறுத்து விட்டார் அவர். இந்த மாறுதலால் விளைந்த பலன் எதிர் சாராரின் சந்தேகந்தான். மகாநாடு கூடுவதை ஒத்திப் போடும்படி கட்டாயப் படுத்துவதற்காகவேண்டி மாலடாவ் இப்படிச் சொல்கிறார் என்று அவர்கள் ஐயங்கொண்டனர். நடைமுறையைப்பற்றி ரஷ்யாவின் அபிப்பிராயம் எதுவோ அதையே தாங்களும் பின்பற்ற வேண்டுமென்று கட்டாயப்படுத்த அவர் முயலுகிறாரா அல்லது,வேறுஏதோ ஒருவிஷயம் மாஸ்கோவில் முடிவு, செய்யப்படுவதை எதிர்பார்த்து அதன் பொருட்டுக் காலகரணம் செய்து வருகிறாரா என்பதும்அவர்களுக்குத் தெரியவில்லை.

### லெனின் கொள்கை

இச்சிறிய் சம்பவம் பெரியதொரு சிக்கலின் சாயைதான். அச் சிக்கலுக்கு மூலகாரணம் மேற்கத்தி நாடுகளைப்பற்றி ரஷ்யா கொண்டுள்ள பரம்பரைச் சந்தேகந்தான் என்றே நினைக்கிறேன். அச்சந்தேகம் ஏற்படுவதற்கு, "சோவியத் உலகமும்" "முதலாளித்துவஉலகமும்" என்றுவது மோதித்தான் ஆகவேண்டும் என்று புதியதோர்கோட்பாட்டை லெனின் ஸ்தாபித்தது ஓரளவுகாரணம். இது அவ்வளவு புதிதல்ல. புரட்சிக்கு முந்தியகாலத்திலும் ரஷ்யாவில் இதே அபிப்பிராயம் இருந்துவரத்தான் செய்தது.

அந்த மனப்பான்மையுடன், ரஷ்யர்கள் தாங்கள் தற்காப்பு என்று கருதுகிற சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அவை, இப்போதிருந்து வரும் அல்லது என்றுவது ஏற்படக்கூடிய ஆபத்தை முன்னிட்டுச் செய்யப் படுவன ஆகும். ஆனால் மேற்கத்தி நாடுகளின் கண்களுக்கு இவை வேறு வகையாகத் தோன்றுகின்றன. இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதமும் பழைய ரஷ்யசம்பிரதாயப்படிதான் நடக்கிறது. எச்சரிக்கை எதுவுமின்றித் திடீரெனவும், விஷயத்தை முன்பு விவாதித்துத் தீர்த்துக்கொள்ளாமலும், போதுமான காரணவிளக்கம் காட்டாதபடியும் நடப்பதுதான் அவர்கள் எப்போதும் அனுசரிக்கிற வழி.

காரியங்கள், கருத்துக்கள், லட்சியங்கள் ஆகியவற்றைத் தெளிவுபடுத்த, மனமில்லாமலிருப்பதும், திடுதிப்பென நடப்பதும் சபைக் கூட்டங்களில் தகராறுகள் கிளம்பக் காரணமானவற்றுள் சில அம்சங்களாகும். மாலடாவ் சலுகைகள் காட்டும்போதும், சமரசத்துக்கு வழி கூறும் போதும் கூட, தமது நோக்கமின்னதுஎன்றுதெரிவிக்கக்கூடாது என்று தீர்மானித்துக்கொண்டு, தந்திரப்போர்முறையைக் கையாள்பவர்போல் நடந்து கொள்வார்.

அனேக விஷயங்களில் அவரது நோக்கங்கள் என்னவென்று விளக்கப்படாமலே போய்விடுகின்றமையால், அவை ஹேஷ்யங்களுக்கும், யூகங்களுக்கும் காரணமாய் சந்தேகங்களுக்கும் இடங்கொடுத்துவிடுகின்றன. உதாரணமாகமகாநாட்டின் இறுதிப்பகுதியில், பொதுப்பட நிலவிய அபிப்பிராயம் இதுதான். அழைப்புகள் அனுப்பப்படுவதற்கு முன்னதாகவே நடைமுறைகளை நிர்ணயித்து விடவேண்டும் என்று மாலடாவ்வற்புறுத்தியது விவாதத்தை இழுத்தடித்து சமாதானமகாநாடுகூடும்தேதியை மேலும் ஒத்திப்போட நேரும்படி செய்வதற்காகத்தான் என்று கருதப்பட்டது. இது, பின் நிகழ்ச்சிகளைப் பார்க்கையில், சரியான காரணமாக இருக்கும் போலத்தான் பட்டது. திங்கட்கிழமை வரும் வரையில்அச்சந்தேகத்தைப்போக்குவதற்கான எதையும் ரஷ்யர்கள் கூறவும் இல்லை. விஷயத்தை மட்டுப்படுத்தியே சொல்வதானால் கூட, இது சுமுகமான விவாதத்துக்கு அனுசரணையான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடியதல்ல, என்றுகூறித்தான் ஆகவேண்டும்

ரஷ்யர்கள் எதையோ மறைப்பதுபோல் காட்டிக்கொள்வதும் ராஜதந்திர உறவில் சஞ்சலத்தை விளைவிக்கிறது.

அற்பவிஷயங்களில் ஏற்படும் ஒற்றுமையின்மையையும் அபிப்பிராய வேற்றுமையையும்கூட ஏதோ ஒரு பெரிய மர்மவிஷயமாகவும், சக்தியாகவும், ஹேஷ்யத்துக்கிடமான விவகாரமாகவும் இது மாற்றி விடுகிறது அதனால் சந்தேகம் வலுத்துவிடுகிறது.

சென்ற ஆறுமாத காலநிகழ்ச்சிகளைக் கவனிக்கையில், இந்தநீண்ட விவாதத்திலிருந்து படிக்கவேண்டிய ஒரு முக்கிய படிப்பினை இதுவென்று நான் கருதுகிறேன். முட்டுக்கட்டைகளும், நெருக்கடியும் ஏற்படுவதற்குக் காரணமான தப்பபிப்பிராயங்கள் எழ இவையே காரணம் என்றும் நான் நினைக்கிறேன்.

---

# இலங்கை இந்தியர் துயரம்

## புது அரசியல் திட்டத்தில் அவர்களது நிலை

இலங்கை இந்தியர் காங்கிரசின் தலைவரான தொண்டைமான்: கூட்டுக் காரியதரிசிகளான எஸ் வைத்தியலிங்கம் ஜார்ஜ் ஆர். மோதா ஆகியோர் எழுதிய பின்வரும் கடிதத்தை டேய்லி டெலிகிராப் பத்திரிகை பிரசுரிக்கிறது,

இந்தியர்களின் நியாயமான உரிமைகளை மறுக்கும் ஓர் அரசியல் திட்டம்திணிக்கப்படுவதைத்தங்கள் பூரணபலத்துடனும் சகல வசதிகளைக்கொண்டும் எதிர்க்க இந்தியர் திடமான சங்கற்பம் செய்து கொண்டிருப்பதை சமீபத்தில்நுவரேலியாவில் கூடிய இலங்கை இந்தியர் காங்கிரஸ் தீர்மானம் மூலமாக எடுத்துரைத்தது.

டொனுமூர் அரசியல் அமைப்புத்திட்டம ஆரம்பித்துவைக்கப்படுகையில் சிங்களவர்களின் இன்றையத்தலைவர் சேனநாயகா வாக்குரிமையை நிர்ணயிப்பது சம்பந்தமாய்க் காரியசாத்தியமில்லாத பரிசீலனை முறையை வற்புறுத்திய போதிலும் இந்தியர்கள் இலங்கையில் நிலையான குடிகளாக ஆனதை வரவேற்பதாகக் கூறப்பட்டு வந்தது.

இப்பிரகடனம்பற்றி இந்தியர் கொண்டிருந்தசந்தேகங்கள்நியாயமானவைதான் என்பதை, சட்டதிட்டம் சம்பந்தமாகவும், நிர்வாகம் சம்பந்தமாகவும், பரிபாலனம் சம்பந்தமாகவும் சரமாரியாகநிறைவேற்றப்பட்டவையும், அடக்கி ஒடுக்குவதும் அவமானப்படுத்துவதும் வர வர அதிகரிக்குமாறு அமைந்து, இறுதியில் இந்தியர்களின்எண்ணிக்கையைக்குறைத்து விடவேண்டுமென்ற கொள்கையில் வந்துமுடிந்தவையுமான ஓரவஞ்சனையான சட்டங்கள் மெய்ப்பித்துவிட்டன. இந்தியர்களின் பொருளாதார, அரசியல் சுதந்தர உரிமைகளும் வாய்ப்பு வசதிகளும் கடுமையாகக் குறைத்துவிடப்பட்டன. ஆயிரக்கணக்கான பேர், விசேஷமாய்த் தோட்டத் தொழிலாளிகள், ஆதரவற்றுத் தவிக்கிறார்கள். அரசியல் திட்ட அமைப்பில் மாறுதல் செய்யப்படுவதாலும், தொழில், வியாபாரம், சமூக பாதுகாப்பு, விவசாயக் குடியேற்றம் ஆகியவை சம்பந்தமான யுத்தபிற்காலத்திட்டங்கள் யோசனையிலிருப்பதாலும், நடவடிக்கையிலிறங்குவது இப்போது இன்றியமையாததாய்விட்டது. இதர திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன. அவை ஒவ்வொன்றிலும் இந்தியர்களுக்கு ஒவ்வோர் வழியில் ஓரவஞ்சகம் செய்யப்படுகிறது. யுத்தசேவை செய்த ஆட்களைச்சிவில் வாழ்க்கையில் மீண்டும் ஈடுபடுத்துவதில்கூட இவ்வோர வஞ்சகம் காணப்படுகிறது.

விஷயங்கள் உருப்பெற்று ஒரு நிலையை அடையக்கூடிய இப்பருவத்தில் வெறுப்புஇருப்பதுநிவர்த்தியில்லாத பெருந்தீமை விளைய ஏதுவாகவிருக்கும். நேரடியான நடவடிக்கையிலிறங்கினால்,வாழ்க்கைச் சீர்குலைவும், துன்பமும் ஏற்பட்டே தீருமாதலால் அது அவசியம்என்ற நிலை ஏற்படாதிருக்கட்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

---

### தாலியில்லாத் திருமணம்

12–7–46ல் சிவகங்கை நா. கருப்பையா அவர்களின் குமாரத்தி பூர்ணச்சந்திராவுக்கும், மதுரை ஆர். பி. தர்மலிங்கம் அவர்களின் குமாரன் நடராசனுக்கும் தோழர் நெடுஞ்செழியன் தலைமையில் சீர்திருத்த வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள். சோமசுந்தரம், (ஆசிரியர்) இராஜசேகரன், (வழக்கறிஞர்) பெ. ரி. நாகு, (ஜோதி நிலையம்) கிட்டு அய்யர், முதலியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளியில் 12–7–46ல் தோழர் நெடுஞ்செழியன் மாணவர்களுக்கு "காலமும் கருத்தும்" என்ற பொருள்பற்றி சொற்பொழிவாற்றினர். மாலைகோவிலே மண்டபத்தில் "இலக்கியம்" என்ற பொருள்பற்றிப்பேசினர்.




ஜெயராம்காயகத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
துடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயகத்தி லேகியம்
1-சேர் ரு. 4. ½-சேர் ரு. 2–2–0.
வி. பி. பி. வேறு.
ஜெடராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் தெற்கு வீதி, கும்பகோணம்.

# ★ ரங்கோன் ராதா! ★

சேளமியன்.

மனிதர்களிலே பலவகை இருப்பதுபோலவே, பேய்களிலும் உண்டு என்றும், எந்தெந்தச்சுபாவமுள்ள பேய் பிடித்துக்கொள்கிறதோ அதற்குத்தக்கபடி பேய் பிடித்துக்கொண்டவர்கள்நடந்துகொள்வார்களென்றும், பூஜாரி சொன்னதுடன், நான் வாதாடவும், காரணம் கேட்கவும் தொடங்கியது கண்டு, என்னை ஒரு வக்கீல்பேய் பிடித்துக்கொண்டது என்று தீர்மானித்ததும், கண்டு நான் சிரித்தேன், ஆனால், அந்தப்புரட்டனின்பேச்சை மெய்யென நம்பினவர்கள், அவன் சொன்னதிலேசூட்சமம் இருக்கிறதென்று கூறினார்கள். என்னசூட்சமத்தைக் கண்டார்களோ நானறியேன். ஒவ்வொருவர் ஒவ்வோர் கதை கூறி, பூஜாரியின் பேச்சைப் பலப்படுத்தினர். இந்தப்புரட்டனின் பேச்சைத்தட்டிப்பேசமுயற்சிப்பது வெட்டிவேலை என்றுஎனக்குத்திட்டமாகத் தெரிந்துவிட்டது. ஆகவே நான் அவன் வார்த்தையை ஏற்றுக்கொண்டவளாகவேநடித்துவரலானேன், அதனாலே, எனக்கு நஷ்டமும் இல்லை, கஷ்டமும் கிடையாது.

பேயோட்டும் பக்கிரி, பணக்காரன், ஏழை என்றஇருவகையினருக்காக இரண்டு தனித்தனிமுறை வைத்துக்கொண்டிருந்தான் என்று கூறினேனல்லவா! அதுபோலவே, முரட்டுப்பேய்களைவிரட்டஒருமுறையும், சாதுப்பேய்களை ஓட்ட மற்றோர் விதமும்கையாண்டுவந்தான். வக்கீல்பேய் பிடித்துக்கொண்டது என்று தீர்மானித்துவிட்டதால் என்னை, ஓட்டுவதற்குக், கையாண்ட முறை, அதிகஉபத்திரவமற்றதாகவே இருந்தது. சூடிடுவது, நாளைக்குப் பத்துவேளைகுளத்தில் மூழ்கச்செய்வது, போன்ற கடுமையானமுறைகள் கிடையாது. காலையிலே எலுமிச்சம் பழம் தேய்த்து ஸ்நானம், கொஞ்சநேரம் "சூரிய நமஸ்காரம்," பிறகு, ஒருமைல் அளவுக்கு, வேப்பமரங்கள் நிறைந்திருக்கும் சாலையிலே உலவுவது, பகலில், யாராவதுஏதாவது கதைபடிப்பது நான்கேட்டுக்கொண்டிருப்பது, மாலையிலேபூஜையில் உட்காருவது, இரவு படுக்கப் போகுமுன்பு, அவன் தரும் "மந்திரித்த" விபூதியைப் பூசிக்கொள்வது, என்ற இந்த விதமாகஅமைந்திருந்தது, பேயோட்டும் முறை. பெரிய இடம், நிம்மதியான வாழ்விலே ஏதோ குழறல்நேரிட்டுவிட்டது, கொஞ்சநாளைக்குமன அமைதியுடன் இருந்துவந்தால், பழையபடி சுபாவம் இருக்கும் என்று அவன் யூகித்துக்கொண்டான். அதனாலே தான், என் விஷயத்திலே, ஒருநல்ல வைத்திய சிகிச்சை போன்ற பேயோட்டும் முறையைக் கைக்கொண்டான். என்னிடம் பணம் இருக்கவே அவன் "பேயின் முறையில் நடந்துகொள்ளாமல்; புனிதத்தனத்துடன்" நடந்து கொண்டான். பாவி, சிலரை இம்சையே செய்துவிட்டான்; ஏழைகளுக்கு இரும்புக்கோலால் சூடு, பணக்காரர்களுக்கு மெல்லிய மிருதுவான 'பிரம்பினால்' தடவிக்கொடுப்பது; ஏழைகளைப் பிடித்திருக்கும் பிசாசு முரட்டுக்குணம் படைத்தது, பணக்காரர்களைப் பிடித்திருப்பதோ, நாசுக்கான சாதுவான பிசாசு! இப்படி அந்தப்புரட்டன் பிசாசுகளிலேகூட இரண்டு வர்க்கங்களைப்பிரித்து வைத்தான்.

கிராமவாழ்க்கை, நல்லகாற்று, குளிர்ந்தநீரில்குளித்தல், காலைமாலை, உலவுதல், பகலில் சந்தோஷமாகப் பொழுது போக்குவது, ஆகியவற்றால் எனக்கு ஆரோக்கியம் அதிகரித்தது, அழகும் வளர்ந்தது. அப்பா பார்த்துப் பார்த்து ஆனந்தப்படுவார். "முகத்திலே இப்போதுதானே, அம்மா பழையகளை இருக்கிறது" என்பார். பேயோட்டியும், தன்னுடையபூஜை வெற்றி பெற்றுவருவதாகக் கூறினான். "ஆனல், முதலியார்! அம்மாவைவிட்டு, அந்தப்பேய், அடியோடு போய்விடவில்லை. மறுபடியும் மறுபடியும் வருகிறது. அதனாலேதான், சந்தோஷமாக இருந்துகொண்டே வருகிறார்கள், திடீரென்று என்றைக்கேனும் ஓர் நாளைக்கு முகத்தைச்சுளித்துக்கொண்டு, யாரிடமும் பேசாமல், இருக்கிறார்கள்" என்றான். அவன் அறியான் காரணத்தை! எனக்கு, உன் அப்பாவின், தொல்லையின்றி, வேடிக்கையாகக்கிராமத்திலே வாழ்வது மனநிம்மதியைக் கொடுத்தது என்றபோதிலும், ஒவ்வோர்நாள், எனக்கு உன் அப்பாவும் தங்கமும் ஊரிலே ............................என்ற கவனம் வரும், உடனே முகம் கருக்கும், ஒருவரிடமும் பேசமாட்டேன், சாப்பாடும் பிடிக்காது, தூக்கமும் வராது, படுக்கையில் புரள்வேன் இதைத்தான், சோகம், பேயின் சேஷ்டை, என்று பேயோட்டி கூறுவது. அந்தச்சோகத்தை அவனுடையபன்னீர்கலந்த விபூதிபோக்கிவிடுவதாக அவன் எண்ணிக்கொள்வான். உண்மையில், என் மனக்கஷ்டத்தைப் போக்கியது அவன் தந்தவிபூதியல்ல, துளசியின் தயவால் ஓரளவு என் துக்கம் குறையும்; துளசி, அவனுடைய இரண்டாம் தாரம், கொஞ்சம் படித்தவள், ஏழைவீட்டுப்பெண், இவனிடப்பணம் இருக்கவே, வயது ஏறுமாறாக இருந்தும், வாழ்க்கைப்பட்டவள். அதனாலே அவள் குறைபட்ட மனதுடன் இருப்பதாக யாருக்கும் காட்டிக் கொண்டதில்லை, என்னிடம்கூட! நான் உண்மையைக்கண்டு பிடிக்கவே பத்து நாளாயிற்று. மனதிலே இருந்த குறையை மறைத்துக் கொண்டு, முகத்தை மலரச் செய்துகொண்டு துளசி வாழ்ந்து வந்தாள். பெரும்பாலும் பகலிலே எனக்குக் கதை படிப்பவள் அவள்தான். அந்தக் கதைகளின் இடையிடையேதான் அவள் தன்னுடைய சுயசரித்திரத்தையும் எனக்குத் தெரிவித்தாள், அழுதுகொண்டல்ல சிரித்துக் கொண்டே; அந்தச்சிரிப்பு சந்தோஷம் மேலிட்டுவந்ததல்ல, உலகிலே நடக்கும் அக்ரமங்களைக் கண்டு கேலி செய்யும் சிரிப்பு அது! துளசி தான் என்சோகத்தைப் போக்குவாள், பல கதைகள் கூறி,

"அக்கா! உங்களுக்கெல்லாம் நூறுபேய் பிடித்துக்கொண்டாலும் பயமில்லை, என்புருஷர் ஓட்டிவிடுவார். ஆனல் என்னைப்பிடித்துக்கொண்டிருக்கும் பேயை ஓட்டவேமுடியாது" என்பாள் துளசி. "அது என்னடி துளசி! அப்படிப் பட்டபிரமாதமானபேய்? ஜெகம் புகழும் உன்புருஷனல்கூட ஓட்ட முடியாத பேயும்உண்டா?" என்று நான் கேட்பேன்.

"அவர் எல்லாப்பேயையும் ஓட்டுவார் அக்கா! ஒரே ஒரு பேயைமட்டும் அவரால் ஓட்டமுடியாது" என்று துளசி பெருமூச்சுடன் கூறுவாள். "அது என்னபேய்?" என்று நான்கேட்பேன். "அதுவா? இதோபார் அக்கா! அந்தப்பேய் என்னைப் பிடித்துக் கொண்டதற்குச் சாட்சி" என்று கூறிக் கொண்டே தன்தாலியை எடுத்துக்காட்டி விட்டுச் சிரிப்பாள். மிகக்கஷ்டமான நிலைமையை மிகச் சாமர்த்தியமாகத் துளசி சமாளித்துக்கொண்டுவந்தாள். மனதக்குத் துளியும் பிடிக்காத கணவனிடம், ஒருதுளியும் அதிருப்தியை வெளிக்குக்காட்டிக் கொள்ளாமல்நடந்து கொள்வது சாமான்யமான காரியமா? துளசியின் துணைஎனக்கு, மிகுந்தநன்மை செய்தது. என்மனதிலே தோன்றும் எண்ணங்களை அவளிடம் கொட்டுவேன். அவள் தன்குறைகளை என்னிடம் கூறுவாள். பத்துநிமிஷம் படிப்பாள், அரைமணிநேரம் அதை ஒட்டிப் பேசுவாள். இப்படி, ஒவ்வோர் தினமும் நிம்மதியாக இரண்டுமணி நேரம் இருப்போம். "அக்கா! என் மூத்தமகள் வருகிறாள் வியாழக்கிழமை" என்று ஒருசேதியுடன் வருவாள். "உன்மூத்த மகளா? போடிபோ! உன்வயிற்றிலேதான் இன்னமும் ஒரு பூச்சிபுழுக்கூட..........." என்று நான்கேலி செய்வேன். மகனே! நான்கொஞ்சம் பெருமையுடனும் கொஞ்சம் கர்வத்துடனும் அதைச் சொல்வேன், ஏன் தெரியுமா? அந்தச்சமயம் தானடா கண்ணே! நீ என் கருவில் உதித்தது! நான் "தலைமுழுகி" இரண்டு மாதமாகி விட்டது. இன்னும் எட்டேமாதம் கட்டித் தங்கத்தைப்பெற! அந்தச்சந்தோஷத்திலே நான் இருந்ததால், துளசியைக் கேலி செய்வேன், "உனக்கு ஏதடி குழந்தை?" என்று. துளசி சொல்வாள், "ஒன்றுக்கு மூன்று, நமக்கு ஒருதுளி உபத்திரவும் இல்லாதபடிக்கு அந்த உத்தமி பெற்றுவைத்துவிட்டுப் போய்விட்டாள்" என்பாள். அதாவது பேயோட்டும் பக்கிரியின் முதல் தாரத்துக்கு மூன்று பெண்கள், அவர்களைக் குறிப்பிடுவாள் துளசி வேடிக்கையாக.

(4-ம் பக்கம் பார்க்க)


## ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!
80, 100-நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.
ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.


டாக்டர் அம்பேத்கார்
மாணவர் இல்லம்

## மாணவர் கழகத் தொடக்க விழா

ஷை விழா திருச்சி திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் 21—7—46 காலை 10 முதல் 1 மணி வரை ஷை இல்லத்தில் சிறப்புடன்நடைபெற்றது.

திரு. எம். கைலை அனந்தர், பி.ஏ., பி.எல்., அவர்கள் தொடக்க விழாஉரை ஆற்றினார்கள்; திரு. வழக்கறிஞர் (திராவிட கழக தலைவர்) டி. பி. வேதாசலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் விழாவில்பேசினார்.

திரு. வீ. வீராசாமிஅவர்களின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

★

## ஆறுமுகம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

குத் தரவேண்டியதைக் கொடுங்கள்" என்றனர் உதவிபுரிந்தோர். "நான் தருவதா? ஆண்டவன் உங்களுக்கு நீண்ட ஆயுளும், நோயற்ற வாழ்க்கையும் குறைவற்ற செல்வமும தருவார்" என்றுஏழைகூறினான். உதவிபுரிந்தவர்களுக்குப்பொறுமை இல்லை கொஞ்சம் கோபத்தோடு கேட்டனர், "இருக்கட்டுமப்பா! ஆண்டவன் கொடுக்கட்டும், நீ எடு." என்றனர். "கொடுப்பது பற்றித் தடை இல்லை ஆனல், ஆண்டவனின் அருஞ்செயலை நான் மறந்ததாக முடியுமே என்பது பற்றியே கவலைப்படுகிறேன், அவனன்றி ஓர் அணுவும் அசையாதே!" என்றான் அந்தஏழை. உதவிபுரிந்தவர்கள் கோபம் தாங்கமுடியாமல் ஒருபலமான அறைகொடுத்தனர், 'அவனன்றி இந்த அறையும் கிடைக்காது" என்று கொக்கரித்தபடி. ஆண்டவன், தன்முகத்தைச் சுளித்துக் கொண்டார்; வேகமாகத் தேவியாரின் அறைக்குச் சென்று விட்டார். அன்று மட்டும் ஆண்டவன், ஆறு திருக்கோலம் கொண்ட அருமையை வியந்து என் குறிப்பேட்டில் ஆறுமுகம் என்ற தலைப்பிலே, அன்றைய நிகழ்ச்சியை எழுதிமுடித்தேன்.

●





கிளி மார்க்
பட்டணம் பொடி.
நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
எ.எஸ்.ராஜன் அண்ட் கம்பெனி


Edited Printed and Published by C N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.